# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழ்

( முக்கனி, ~~முத்தமிழ்~~, மூவேந்தர் )

1. தமிழரின் தாய்மொழி ________________ .

( சிங்களம், ஆங்கிலம், தமிழ் )

2. மூதுரையை எழுதியவர் ________________ .

( ஔவையார், திருவள்ளுவர், இளங்கோவடிகள் )

3. தவளை தத்தும். அதுபோல மீன் ________________ .

( தாவும், ஊரும், நீந்தும் )

4. **ஒலிவட்டு:**

காட்டில் அகவிய பறவை ________________ .

( மயில், குயில், காகம் )

5. மாமாவுக்கு மாமி போல, தோழனுக்குத் ________________ .

( சிறுமி, மாணவி, தோழி )

6. பருந்துகள் வானத்தில் ________________ .

( பறந்தது, பறந்தன, பறக்கிறது )

7. முக்கனிகளில் ஒன்று ________________ .

( அன்னாசிப்பழம், வாழைப்பழம், கொய்யாப்பழம் )

8. 16 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________

( பதிணாறு, பதினாரு, பதினாறு )

9. தமிழரது வீரம் பற்றிக் கூறும் நூல் ____________________ .

( திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம் )

10. ஐயம் இன்றிக் கற்பது ____________________ .

( அறம், அன்பு, தெளிவு )

11. அதியர்மான் ____________________ ஆண்டு வந்தான்.

( மதுரையை, தகடூரை, வேலூரை )

12. தமிழீழத்தின் தேசியமலர் ____________________ .

( வாகைப்பூ, செவ்வரத்தம்பூ, கார்த்திகைப்பூ )

13. பண்டாரவன்னியன் ____________________ எதிர்த்துப் போராடினான்.

( போர்த்துக்கேயரை, ஆங்கிலேயரை, ஒல்லாந்தரை )

14. அப்பா தனது வேலைகளை ________________ எனச் செய்து முடித்தார்.

( மளமள, சலசல, பளபள )

15. பாரிசில் உலகப் புகழ் பெற்ற ____________________ அமைந்துள்ளது.

( சாய்ந்த கோபுரம், ஈபில் கோபுரம், தாச்மகால் )

புள்ளிகள் 15

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

எ - கா

கண்ணன் ___பாடலை___ ப் பாடினான். ( பாடல் )

1. தங்கை ____________ அஞ்சல் எழுதினாள். ( நண்பி )

2. புறா ____________ சிக்கியது. ( வலை )

3. அம்மா ____________ அழைத்தார். ( தம்பி )

4. குழந்தை ____________ உறங்குகின்றது. ( தொட்டில் )

5. நான் ____________ வண்ணம் தீட்டினேன். ( ஓவியம் )

புள்ளிகள் 10

## 3) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

எ - கா

____பழங்கள்____ சத்துள்ள உணவாகும்.

( ~~பழங்கள்~~, பளங்கள் )

1. பூக்களில் இருந்து __________ வீசியது.

( மனம், மணம் )

2. கொக்கின் __________ நீளமானது.

( அழகு, அலகு )

3. இன்று காலை __________ பெய்தது.

( மழை, மலை )

4. மாணவன் __________ படித்தான்.

( குரல், குறள் )

5. கோடைகாலத்தில் பறவைகளின் __________ கேட்கும்.

( ஒலி, ஒளி )

புள்ளிகள் 05

## 4) சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமாக எழுதுக.

(எ - கா)

முத்தமிழையும் / வளர்த்தனர் / மன்னர் / பாண்டிய

பாண்டிய மன்னர் முத்தமிழையும் வளர்த்தனர்.

1. வள்ளல் / ஒரு / பாரி / சிறந்த

_______________________________________________.

2. ஆடினார் / நடனம் / ஆசிரியர்

_______________________________________________.

3. அதிகாலையில் / கூவும் / சேவல்

_______________________________________________.

4. மரத்தில் / கட்டும் / கூடு / பறவைகள்

_______________________________________________.

5. நாடுகளில் / வாழ்கின்றனர் / தமிழர் / பல

_______________________________________________.

புள்ளிகள் 10

**5) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அவர்கள் | அவர் | அவள் |
| ~~அது~~ | அவன் | அவை |

(எ - கா)

கார்த்திகைப்பூ மிகவும் அழகானது. ___அது___ கொடியில் பூக்கும் பூவாகும்.

1. மாமா வீட்டுக்கு வந்தார். __________ எனக்கு உடைகள் தந்தார்.

2. சிறுவர்கள் பூங்காவுக்குச் சென்றார்கள். அங்கே __________ பந்தடித்து விளையாடினார்கள்.

3. உழவன் வயலுக்குச் சென்றான். __________ நெல்லை அறுவடை செய்தான்.

4. குயிலி நல்ல சிறுமி. __________ பெற்றோர் சொல்லைக் கேட்டு நடப்பாள்.

5. தேனீக்கள் பூக்களில் இருந்தன. __________ தேனைக் குடித்து மகிழ்ந்தன.

புள்ளிகள் 10

## 6) ஒரு சொல்லில் விடை எழுதுக.

எ - கா

பாரிசு நகரத்தின் நடுவே வெற்றிவளைவைக் கட்டியவன் யார்?

நெப்போலியன்

1. அதியர்மான் ஔவையாருக்குக் கொடுத்த கனியின் பெயர் என்ன?

_______________________________________________

2. வாழைக்கன்று எதிலிருந்து முளைக்கும்?

_______________________________________________

3. முத்தமிழும் எவை?

_______________________________________________

4. அடங்காப்பற்று என அழைக்கப்பட்ட இடம் எது?

_______________________________________________

5. வானத்தில் செல்லும் உந்தின் பெயர் என்ன?

_______________________________________________

புள்ளிகள் 10

## 7) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இனியன் வீட்டின் அருகே ஒரு தோட்டம் இருக்கின்றது. இனியன் தோட்டத்தில் கத்தரிச்செடிகளை நட்டான். இனியன் கத்தரிச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவான். அவை செழித்து வளர்ந்தன. கத்தரிக்காய்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டன. இனியன் தோட்டத்தில் கத்தரிக்காய்களைப் பறித்தான். இனியன் கத்தரிக்காய்களை அம்மாவிடம் கொடுத்தான். அம்மா கத்தரிக்காயில் கறி சமைத்தார்.

எ - கா

யார் வீட்டின் அருகே தோட்டம் இருக்கின்றது?

இனியன் வீட்டின் அருகே தோட்டம் இருக்கின்றது. _____ .

1. இனியன் எங்கே கத்தரிச்செடிகளை நட்டான்?

____________________ .

2. இனியன் எவற்றிற்குத் தண்ணீர் ஊற்றுவான்?

____________________ .

3. கத்தரிக்காய்கள் என்ன நிறத்தில் காணப்பட்டன?

____________________ .

4. இனியன் கத்தரிக்காய்களை யாரிடம் கொடுத்தான்?

____________________ .

5. அம்மா கத்தரிக்காயில் என்ன சமைத்தார்?

____________________ .

புள்ளிகள் 10

## 8) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதுக.

(எ - கா)

சோமசுந்தரப்புலவர் நவாலியில் பிறந்தார் .

1. நாம் உயிர்களிடத்தில் அன்பாய் ______ .

2. கயல்விழி தாளம் ______ .

3. மாடுகள் புல் ______ .

4. நான் வாழைநாரில் பூமாலை ______ .

5. தாயைக் கண்ட குருவிக்குஞ்சு ‘கீச்கீச்’ என்று ______ .

புள்ளிகள்10

## 9) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.

(எ - கா)

இனிய உளவாக __இன்னாத__ கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
( ~~இன்னாத~~, இல்லாத, கல்லாத )

1. அற்றால் அளவறிந்து ____________ அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு
( கற்க, உண்க, பெறுக )

2. கான முயல்எய்த ____________ யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது
( வேலினில், வாளினில், அம்பினில் )

புள்ளிகள் 05

**10) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15